விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 327 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 25 வெள்ளிக்கிழமை (11.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


## சுதந்திர தினத்திற்கு முன் தமிழர்களுக்கு தீர்வு!

- அடுத்த வாரம் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு
- பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

வடக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு வெளிநாட்டுத் தலையீடு களின்றி அடுத்த ஆண்டு 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு முன்னதாக அமைதியான முறையில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனம் மோதியதில் வீதியால் சென்றவர் பலி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற விபத்தில் 4 பிள்ளைகளின் தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உமையாள்புரம் பகுதியில் ஏ-9 வீதியில் பாதசாரிகள் நடந்து செல்லும் பாதையில் சென்று கொண்டிருந்த 11

## வீதியால் சென்றவர் மீது வாள்வெட்டு

### யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை தபாற்கட்டை சந்தி பகுதியில் வீதியில் பயணித்த நபர் மீது நேற்று மதியம் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாள்வெட்டினை மேற்கொண்டுவிட்ட 11

### சட்டவிரோத காணி உறுதி

## சட்டத்தரணி உட்பட 10 பேர் அதிரடிக் கைது

(யாழ்ப்பாணம்)

காணி சம்பந்தமான சட்டவிரோதமான ஆவணங்களை தயாரித்ததற்கு துணைபோன சட்டத்தரணி ஒருவரும், ஆவணங்களை தயாரித்த, யாழில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் முன்னாள் அதிபரும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அராலிவீதி - பொம் 11

## திருட்டுக் கும்பல் சிக்கியது

- 60 பவுண் நகை மீட்பு
- நால்வர் கைது



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக வீடுகளை உடைத்து திருட்டுகளில் ஈடுபட்டு வந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட் 11

### ஐஸ் போதைப் பாவனை;

## ஆயுட் காலம் இரண்டு வருடமே

(கொழும்பு)

ஐஸ் போதைப் பொருளை பயன்படுத்துபவர்களின் ஆயுட்காலம் இரண்டு வருடகாலமாக வரையறுக்கப்படுவதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ 11

### நீண்ட நாட்களின் பின்

## விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கே இவ்வாறு 12

## 14ஆம் திகதி வரை வடக்கில் கனமழை

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு தென்கிழக்காக வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறவுள்ளது.

இது வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து எதிர்வரும் 13 ஆம் திகதியளவில் 11

## “அரசியல் தீர்வுக்கான மக்கள் பிரகடனம்”

### இந்திய துணைத்தூதுவரிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் “அரசியல் தீர்வுக்கான மக்கள் பிரகடனம்” இந்தியத் துணைத்தூதுவரிடம் கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மரு 11

## யாழ். இந்திய துணைத் தூதரக அலுவலகம் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மருதடி வீதியில் அமைந்துள்ள இலங்கைக்கான இந்திய துணைத் தூதரகம் மீது நேற்று முன் தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப் 11

### குழந்தையை துன்புறுத்திய காணொலி;

## தாயும் குழந்தையும் நேற்று மீட்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, கரம்பன் பகுதியில் வசித்து வந்த வாய் பேச முடியாத பெண் ஒருவரும் அவரது 3 வயது மகளும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போன நிலையில், அவர்களை பொதுச்சுகாதார குடும்ப நல உத்தியோகத்தர்கள் நேற்றைய தினம்மீட்டுள்ளனர்.

குறித்த பெண்ணின் கணவருடன் அவர் சென்றுள்ள நிலையில், அவ 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.சி.சுதாகரன்**
(விசேட கல்வி அலகு)



**செல்வி யோ.அன்ரனீற்ரா சுதர்சினி**
(மனைப் பொருளியல்)

எமது கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து தற்போது யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற ஆசிரிய நண்பர் **திரு.சி.சுதாகரன்** அவர்களையும் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட புவியியல் பாட ஆசிரியர் **திரு.ம.ஜங்கரன்** அவர்களையும் மனைப் பொருளியல் பாடத்தில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட **செல்வி யோ.அ.சுதர்சினி** ஆசிரியர் அவர்களையும் பாராட்டுவதுடன் கல்விப்புலத்தில் மென் மேலும் பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற வாழ்த்துகின்றோம்.

(13405) Congratulations

**அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம், யா/இணுவில் மத்திய கல்லூரி.**


## எனது கணவர் சரணடைந்ததை நான் நேரில் கண்டேன்



அனந்தி சசிதரன்

(யாழ்ப்பாணம்)

"இராணுவத்திடம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் சரணடையவில்லை எனக் கூறப்படுவது பொய்" என தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் தளபதி எழிலனின் மனைவியும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

இறுதிப் போரில் தம்மிடம் விடுதலைப் புலிகள் எவரும் சரணடையவில்லை என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளமை தொடர்பில், கருத்துரைக்கும்போதே அனந்தி சசிதரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி - அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்புடன் சென்ற எனது கணவர் எழிலன், இராணுவத்திடம் சரணடைந்ததை நான் நேரில் கண்டேன்.

எழிலனை அழைத்துச் சென்றவர்கள் இராணுவ சிப்பாய்கள் இல்லை. இராணுவ உயர் அதிகாரிகளே எழிலனை அழைத்துச் சென்றார்கள். எழிலனுக்கு அருகாமையில் நாங்கள் நின்றிருந்த ஒரு சமயத்தில் "மாவிலாறு" "எழிலன்" எனும் வார்த்தைகளைக் கூறிக்கொண்டே எழிலனை இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர் என மேலும் தெரிவித்தார். (4-7)

### யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட

## இளங்கலை மாணவர்களுக்கான இரண்டாவது ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் கலைப் பீட இளங்கலை மாணவர்களுக்கான இரண்டாவது ஆய்வரங்கு நேற்றைய தினம் இடம்பெற்றது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆய்வரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

எகெட் (AHEAD) செயற்றிட்டத்தின் நிதி அனுசரணையுடன் நடைபெற்ற ஆய்வரங்கானது, "பெருந் தொற்று மற்றும் பொருளர்தார நெருக்கடிகளிடையே வழமைக்கு திரும்புதலும் மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்புதலும்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டது.

கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர் தலைமையில் நடைபெற்ற இவ் ஆய் வரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் திறவுரையினை கொழும்புப் பல்கலைக்கழகப் பொருளியல்துறை பேராசிரியர் கோ.அமிர்தலிங்கம் 'இலங்கையின் தற்போதய பொருளாதார நெருக்கடி' எனும் கருப்பொருளில் மேற்கொண்டார்.

இவ் ஆய்வு மாநாட் டுக் கென யாழ்ப்பாணப் ப்ல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களிடமிருந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலமைந்த ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டு, அவற்றிலிருந்து 125 ஆய்வுக் கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டன. (4-7,33)

## சடுதியாக வீழ்ச்சியடைந்த வாகனங்களின் விலைகள்

(கொழும்பு)

சந்தையில் தற்போது வாகனங்களின் விலையில் கடுமையான வீழ்ச்சி பதிவாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மிக் வேகமாக வாகனங்களின் விலை வீழ்ச்சியடைந்து வருவதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் ஆக்ஸியோ, பிரீமியோ, ரைஸ், சிஎச்ஆர், வெசல், வேகன் ஆர், பாஸோ, விட்ஸ், கிரேஸ் போன்ற பல வகை கார்களின் விலைகள் குறைந்து வருவதாக அந்த சங்கத்தின் செயலாளர் பிரசாத் குலதுங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த மாதங்களில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் வாகனங்களின் விலைகள் பலமடங்கு அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## மண்டைதீவு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரியை இடமாற்ற வேண்டாம்

### நோயாளர் நலன்புரிச் சங்கம் கோரிக்கை

(மண்டைதீவு)

மண்டைதீவு பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மருத்துவர் வி.தவநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை உடனடியாக நிறுத்தி அவரைத் தொடர்ந்தும் மண்டைதீவு வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு ஆவன செய்யுமாறு மண்டைதீவு நோயாளர் நலன்புரிச் சங்கமும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு மண்டைதீவு நோயாளர் நலன்புரிச் சங்கம் அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. (4)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603,**

**021 567 1532**


## மரண அறிவித்தல்

### திருமதி புஷ்பராணி புலேந்திரன் (ராணி)



*தோற்றம்* *26.10.1939* — *மறைவு* *10.11.2022*

*யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புலேந்திரன் புஷ்பராணி அவர்கள் நேற்று (10.11.2022) கர்த்தருக்குள் இளைப்பாறினார்.*

*அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நேசமாணிக்கத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி கனகரட்ணத்தின் அன்பு மருமகளும் கனகரட்ணம் புலேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புஷ்பரட்ணம், காலஞ்சென்ற புஷ்பநாயகம், புஷ்பநாயகி, புஷ்பரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.*

*அன்னாரின் ஆராதனை நாளை (12.11.2022) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக காலை 11 மணியளவில் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**இல.36/9,**
**சேர் பொன்.இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**021 221 9716,**
**077 411 9678**

(C-5244)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலை தொடர்பில் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)
காலநிலை மாற்றத்தால், யாழில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை தொடர்பில் விசேட கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலரின் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், பிரதேச சபை தவிசாளர், முப்படைகள், பொலிஸார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சீரற்ற கால நிலையினால் ஏற்படவுள்ள பாதிப்புக்களில் இருந்து மக்களை பாதுகாத்தல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை முன்னெடுத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி உதவிகள் வழங்கல் மற்றும் நிவாரணங்கள் வழங்கல் உள்ளிட்ட பல் வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (நி-6-33)

# தமிழர்களின் பூர்வீக நிலங்களை விடுவித்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்துங்கள்

## சுரேஷ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைக் கபளீகரம் செய்த அரசாங்கம் எமது பிரதேசங்களின் பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றம் செய்து குடிப் பரம்பலை மாற்றியமைக்கும் திட்டத்தைக் கைவிட்டு கபளீகரம் செய்த காணிகளை விடுவித்து எமது மக்களை நிம்மதியாக அவர்களது பிரதேசத்தில் வாழவிடுவதே நல்லிணக்கத்திற்கான முதற்படி என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது யுத்தம் முடிந்த பின் காணிகள் தொடர்பான பிரச்சினை என்பது ஒரு பூதாகரமான பிரச்சினையாக மாறியுள்ளது. "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்" யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் சொந்தக் காணிகளுக்கு மீளவும் குடியேற முடியாத நிலையே இன்னமும் தொடர்கின்றது.

தமிழ் மக்களின் காணிகளைப் பறிப்பதற்காக மேற்கொள்ளும் வன ஜீவராசிகள் திணைக்களம், வன விலங்குப் பாதுகாப்புத் திணைக்களம், வன இலாகா, தொல்பொருள் திணைக்களம், பறவைகள் சரணாலயம் போன்ற திணைக்களத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் முதற்கட்டமாக வடக்கு- கிழக்கில் முழுமையாக நிறுத்துவதுகாணிப் பிரச்சினையைத்தீர்ப்பதற்கான ஆரம்பக் கட்டமாக அமையும் என அவ் வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (நி-6)

# போதைப் பாவனை அதிகரிப்பு விசேட சோதனையில் பொலிஸார்



(கரணவாய்)
பருத்தித்துறையில் போதைப் பாவனையை தடுக்கும் நோக்கில் மோப்ப நாயுடன் பொலிஸார் பல இடங்களில் விசேட சோதனையில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பல பகுதிகளில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று வியாழக்கிழமை குறித்த சோதனை நடவடிக்கை பருத்தித்துறை சந்தை, முச்சக்கரவண்டி தரப்பிடம், மந்திகைச் சந்தை, மந்திகையில் மருத்துவமனை வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பியந்த அமரசிங்க தலைமையிலான குழுவினராலே குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-6-60)

## மீசாலை பொதுநூலகத்தில்

# வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்களுக்கு போட்டிகள்

(சாவகச்சேரி)
தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மீசாலை பொதுநூலகத்தால் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தரம் 1 தொடக்கம் 7 வரையான மாணவர்களுக்கான போட்டிகள் நாளை சனிக்கிழமையும் தரம் 8 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கான போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் மீசாலை பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறும் என நூலகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-6-30)

# ஆறுமுகநாவலர் குருபூசையையொட்டி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி

(யாழ்ப்பாணம்)
வண்ணை- சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1, 2 மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது. இப்பேச்சுப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு தரம் 1 இற்கும் பி.ப 2 மணிக்கு தரம் 2 இற்கும் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமையாகும்.

இப்போட்டிக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல. 82 (144) நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு அலுவலகத்தில் பி.ப 3 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனசைவசமய அபிவிருத்திக்கழக பரீட்சை செயலருமான சு. சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (நி-6)

# பிடிவிறாந்தில் கைதான நபரிடம் வழிப்பறியில் பறிபோன சங்கிலி மீட்பு

(கரணவாய்)
பிடிவிறாந்தில் கைது செய்யப்பட்ட நபரிடம் வழிப்பறிக் கொள்ளையில் பறிபோன தங்கச் சங்கிலி மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நெல்லியடிப் பொலிஸாரால் அல்வாய் தெற்கைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர் பிடிவிறாந்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சட்டைப் பையினுள் தங்கச் சங்கிலி ஒன்று மீட்கப்பட்டது. அவ் தங்கச் சங்கிலி உடுப்பிட்டிப் பகுதியில் அறுக்கப்பட்டதென சந்தேகநபர் ஒப்புக் கொண்டதாக நெல்லியடிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-6-60)

# தனங்கிளப்பில் 2 ஆம் கட்ட உர விநியோகம்

(சாவகச்சேரி)
கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பினருக்கு இன்று வெள்ளிக்கிழமை கைதடி கமநல சேவை நிலையத்தில் வைத்து நெற்செய்கைக்கான இரண்டாம் கட்ட யூரியா உரம் விநியோகிக்கப்படவுள்ளதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

60 பரப்பிற்கு 50 கிலோகிராம் என்ற அடிப்படையில் குறித்த உரமானியம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

எனவே தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் குறித்த தினத்தில் ஏக்கர் வரி பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை பிரதியுடன் வருகை தந்து உரத்தினை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தனர். (நி-6-30)

# பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)
மீசாலை தெற்கு சாவகச்சேரி பகுதியில் அமைந்துள்ள மதுவன் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மதுவன் சனசமூக நிலையத் தலைவர் ஸ்ரீகரன் தலைமையில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வானது சாவகச்சேரி நகர சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ளதாக குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# கோடாவுடன் கைதானவர்கள் பிணையில் விடுதலை

(அராலி)
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் ஊரி பகுதியில் கசிப்பு காய்ச் சுவதற்குப் பயன்படுத்தும் கோடாவுடன் 53 வயதுப் பெண் ஒருவரும் 20 வயது ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் களபூமி பொலிஸ் காவலரண் பொலிஸாரினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து 7500 மில்லி லீற்றர் கோடாவும் குறித்த பெண்ணிடமிருந்து 1500 மில்லி லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டது.

குறித்த இருவரையும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை அவர்களை பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதியளித்துள்ளார். (நி-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி இருபது -20 தரவரிசையில் முதலிடத்திற்கு முன்னேறிய வனிந்து

ஐ.சி.சி ஆடவர் இருபது-20 பந்துவீச்சு தரவரிசையில் இலங்கை அணியின் சுழற் பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க முதலிடத்தை பிடித்துள்ளார்.

முன்னதாக ஆப்கானிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் ரஷித்கான் முதலிடத்தை குறுகிய காலத்திற்கு தக்க வைத்திருந்தார்.

2022 ஐ.சி.சி ஆடவர் இருபது-20 உலகக் கிண்ண போட்டியில் தனது துல்லியமான பந்துவீச்சில் அவுஸ்திரேலிய வீரர் ஜோஷ் ஹேசில்வுட்டை பின்தள்ளி ரஷித்கான் முதலிடத்திற்கு முன்னேறினார்.

இருப்பினும் உலகக் கிண்ண போட்டியில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக 3/13 என்றும் இங்கிலாந்துக்கு எதிராக 2/23 என திறமையை வெளிப்படுத்திய ஹசரங்க முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். (6)

# இந்தியாவை பந்தாடியது இங்கிலாந்து இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுடன் மோதல்



அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் 8 ஆவது இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் அத்தியாயத்தின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை மெல்பர்ன் கிரிக்கெட் விளையாட்டரங்கில் நாளை மறுதினம் எதிர்த்தாட இங்கிலாந்து தகுதிபெற்றது.

அடிலெய்ட் ஓவல் விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் இந்தியாவை 10 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் விளையாட இரண்டாவது அணியாக இங்கிலாந்து தகுதி பெற்றது.

இந்தியாவினால் நிர்ணயிக்கப்பட்ட 169 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து துடுப்பாட்டத்தில் முழுமையான ஆதிக்கம் செலுத்தி 16 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 170 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது.

அணித் தலைவர் ஜொஸ் பட்லர், அலெக்ஸ் ஹேல்ஸ் ஆகிய இருவரும் இந்திய பந்து வீச்சாளர்களைத் துவம்சம் செய்து அதிரடி வேகத்தில் ஓட்டங்களைக் குவித்து இருபது-20 உலகக் கிண்ண வரலாற்றில் புதிய சாதனையுடன் கூடிய 170 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றியை உறுதிசெய்தனர்.

இதனிடையே கோலி 42 ஆவது ஓட்டத்தைப் பெற்ற போது சர்வதேச இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் 4,000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்த முதலாவது வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை நிலை நாட்டினார். (6)



கனடா- ஒன்ராறியோ மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜிம்னாஸ்டிக் போட்டியில் தென்மராட்சி- கைதடி நுணாவிலை சேர்ந்த செல்வி அபிசா அகிலகுமாரன் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வெற்றி கொண்டுள்ளார்.

இந்நிலையில் கனடாவில் இடம்பெற்ற tamil mirror awards gala night நிகழ்வில் அபிசா அகிலகுமாரன் கௌரவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(படம்-சுபேசன்)



பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் பொன் விழா உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் நாள் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

குறித்த போட்டியில் பொலிகண்டி பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழக அணியும் கரணவாய் விளையாட்டுக்கழக அணியும் மோதின. இதில் 2:1 என்ற பேற்றுக் கணக்கில் பொலிகை ஒற்றுமை அணி வெற்றி பெற்றது.

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2729

### மாதுளா

ஒரு மனிதன்
விழாமலே வாழ்ந்தான் என்பது
பெருமை அல்ல..
விழுந்த போதெல்லாம்
தன்னம்பிக்கையுடன்
எழுந்தான் என்பதே பெருமை.

### கிங்ஸ்லி

வாழ்க்கையில் நீங்கள்
படிக்கும் புத்தகங்கள்
அறிவையும்,
நீங்கள் பழகும் மனிதர்கள்
அனுபவத்தையும்
கற்றுத்தருகிறார்கள்.

### சியானி

வையகம் ஆயிரம்
சொல்லிட்டபோதிலும்
உலகமே திரண்டு எதிர்திட்ட
போதிலும்
உறவுகளே நம்மைப்
பழித்திட்ட போதிலும்
உறுதியாய் நின்று
ஜெயித்திடல் வேண்டும்


### விக்னேஷ்

ஒவ்வொரு நீண்ட இரவுகளும்
விடிகின்ற வேளையிலே
நமக்கொரு சேதி சொல்லிடும்
நலம் பெற்று நாம் வாழ
தொலைதூர பார்வையோடு
கண நேரத்தையும் வீணடிக்காது
குறிக்கோளுடன் வாழ்பவனே
வெற்றிக்கனியை சுவைத்திடுவான்

### தனுசியா

ஒருவர் உன்னை
மதிப்பதால் நீ
பெரியதாகிவிடப்போவது
இல்லை..!
உன்னை இகழ்வதாலும்
நீ சிரியதாகிவிடமாட்டாய்..!
எனவே என்றுமே
நீ நீயே என்பதை
வாழ்க்கையில்
புரிந்து கொள் !

### சுதர்சன்



முடியாது என்று
நீ தீர்மானிக்கும்
ஒவ்வொரு
செயல்களுக்கும்
ஏதாவதொரு
வகையில்
அதை வெல்ல
போகும் யுக்தி
புதைந்திருக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்[illegible] facebook [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் யுத்த குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும்

## பிரிட்டன் பாராளுமன்றில் வலியுறுத்து

(லண்டன்)

இலங்கை குறித்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டுள்ள பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு எதிராக மக்னட்ஸ்கி பாணியிலான தடைகளை விதிக்க வேண்டும், சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் ஜி.எஸ்.பி வரிச்சலுகை தொடர்பான தனது அர்ப்பணிப்புகளை நிறைவேற்ற வேண்டும். தனது இராணுவத்திற்கான மிகவும் அதிகரித்த செலவீனங்களை குறைக்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தமிழர்களிற்கான அனைத்து பாராளுமன்றக் குழுவின் தலைவரும் கென்சவேர்ட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான எலியட் கோல்பேர்ன் பிரிட்டன் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அப்பால் செல்ல வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

யுத்த குற்றங்களை விசாரணை செய்து குற்றவியல் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான பொறிமுறை என்ற விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானம் போதுமானதல்ல என தமிழர்களுக்கான அனைத்து பாராளுமன்ற குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எலியட் கோல்பேர்ன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் யுத்த குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதன் மூலம் குற்றவியல் பொறுப்புக்கூறலிற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களை வழக்கு விசாரணைக்கு உட்படுத்துவதற்கு குறிப்பிட்ட அரசாங்கம் தயாரில்லை என்பதற்காக அவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விடுபாட்டுரிமையை அனுமதிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


## 15ம் நாள் நினைவஞ்சலி

யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

### யோண்- யேசுதாஸன்

28.10.2022 காலமாகிவிட்டார். இவரின் நல்லடக்க ஆராதனை வவுனியாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

074 240 0370, 076 480 7171

(03408)



## கூட்டுறவுச் சங்க பணிநிலைகளுக்கான தொழில் வாய்ப்பு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பணிநிலைகளுக்கான தொழில் வாய்ப்பு விண்ணப்பம் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| அடிப்படை கல்வித் தகைமை | : க.பொ.த உயர் தரத்தில் சித்தி. |
| வயதெல்லை | : 18-45 வரை |
| வதிவிடம் | : கிளிநொச்சி மாவட்டம் |
| சம்பளம் | : நேர்முகத்தேர்வின் போது தீர்மானிக்கப்படும் |

சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தினை தயாரித்து கல்வித்தகைமை, அனுபவத் தகைமை, சான்றிதழ் பிரதிகளுடன் **தலைவர், மாவட்ட கூட்டுறவுச் சபை, A9 வீதி டிப்போ சந்தி அருகாமை, கிளிநொச்சி** என்ற முகவரிக்கு 18-11-2022 ம் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு**
வட மாகாண கூ.அ.வங்கி,
திட்ட இணைப்பாளர்.
தொ.பே.இல : 076 638 4789

(F-6243)

**தலைவர்**
கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை


# உலக வங்கி தொடர்ந்தும் இலங்கைக்கு உதவும்

## தலைவர் டேவிட் மல்பாஸ்

(எகிப்து)

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உலக வங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என அதன் தலைவர் டேவிட் மல்பாஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்தோடு கடன் மறுசீரமைப்புக்கு உடனடியாக உடன்படுவதற்கு இலங்கையின் உத்தியோகபூர்வ இருதரப்பு மற்றும் தனியார் துறை கடன் வழங்குநர்களுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறும் அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஊக்குவித்துள்ளார். எகிப்தில் நடைபெற்ற மாநாட்டில் உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு குறித்து உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது. (நி)

# 18 சதவீதத்தால் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் நாடளாவிய ரீதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த வாரம் 1114 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்ட நிலையில் அதற்கு முந்தைய வாரத்தில் 943 பேர் மட்டுமே பதிவாகியிருந்தனர்.

இதற்கமைவாக நாட்டில் இவ் வருடம் 63549 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலவரத்தை கருத்திற்கொண்டு 44 பிரிவுகளை டெங்கு அபாய பிரதேசங்களாக அறிவிக்க சுகாதார மருத்துவ அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி)

# இராசிபலன்

11.11.2022
ஐப்பசி 25, வெள்ளிக்கிழமை
திருதியை முன்னிரவு 8.07 மணிவரை

மிருகசீரிடம் முழுவதும்
சுபநேரம் -6.06-7.36 மணிவரை
இராகுகாலம் -10.36-12.06 மணிவரை

சந்திராஷ்டமம்
அனுசம்

வளவன்




உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.




எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.




மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், உடல் நலனில் கவனம் தேவை, கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கலாம்.




ஆழ்ந்த சிந்தனையுண்டு, உறவினர்களின் சந்திப்புகளால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




செய்தொழில் மேன்மையுண்டு, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், கௌரவமான நாள்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள் போசன சுகமுண்டு.

நம்பிக்கை தான் சாதனைக்கு அடிப்படை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 25





லையுடன் ஆண்டாள் பாசுரம் பாடிக் கொண்டு வந்து நடனம் ஆடினார்கள். இதை வல்லவரையன் பார்த்துப் பரவசமடைந்திருக்கையில், அவனுக்குப் பின்புறத்தில், "கண்டோம், கண்டோம், கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்" என்ற பாடலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பாடியவன் ஆழ்வார்க்கடியான் நம்பிதான். இல்லை! ஆழ்வார்க்கடியானுடைய தலை பாடியது! அந்தத் தலை மட்டும் பலி பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது!

"நீ பிறந்த அரசகுலத்தின் வரலாறு என்ன? எத்தனை ஆண்டுகளாக உன் குலத்தினர் அரசு புரிகின்றனர்? உண்மையைச் சொல்" என்று பூசாரி கேட்டான். "வாணர்குலத்து வல்லவரையர் முந்நூறு ஆண்டுகள் அரசு புரிந்தவர்; என் தந்தையின் காலத்தில் வைதும்பராயர்களால் அரசை இழந்தோம்" என்றான் வந்தியத்தேவன். "அப்படியானால், நீ தகுந்த பலி அல்ல! ஓடிப்போ!" என்றான் பூசாரி.

திடீரென்று காளிமாதாவின் இடத்தில் கண்ணபெருமாள் காட்சி அளித்தார். கண்ணன் சந்நிதியில் இரண்டு பெண்கள் கையில் பூமா

இந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்காமல் வல்லவரையன் திரும்பினான்; தூணில் முட்டிக் கொண்டான். கனவு கலைந்தது; கண்கள் திறந்தன. ஆனால் கனவையும் நனவையும் ஒன்றாய்ப் பிணைத்த ஒரு காட்சியை அவன் காண நேர்ந்தது.

அவன் படுத்திருந்த இடத்துக்கு நேர் எதிர்ப்புறத்தில் கடம்பூர் மாளிகைச் சுற்று மதிலின் மேலே ஒரு தலை தெரிந்தது. அது, அந்த ஆழ்வார்க்கடியான் நம்பியின் தலைதான். இந்தத் தடவை அது கனவல்ல. வெறும் பிரமையும் அல்ல என்பது நிச்சயம்.

ஏனெனில், எத்தனை நேரம் பார்த்தாலும் அந்தத் தலை அங்கேயே இருந்தது. அது வெறும் தலை மட்டுமல்ல, தலைக்குப் பின்னாலே உடம்பு இருக்கிறது என்பதையும் எளிதில் ஊகிக்கக்கூடியதாயிருந்தது. ஏனெனில், ஆழ்வார்க்கடியானுடைய கைகள் அந்த மதில் ஓரத்தின் விளிம்பைப் பிடித்துக் கொண்டிருந்தன. அதோடு, அவன் வெகு கவனமாக மதிலுக்குக் கீழே உட்புறத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவன் அவ்வளவு கவனமாக அங்கே என்னத்தைப் பார்க்கிறான்!... இதில் ஏதோ வஞ்சகச் சூழ்ச்சி இருக்கவே வேண்டும்.

ஆழ்வார்க்கடியான் நல்ல நோக்கத்துடன் அங்கு வந்திருக்க முடியாது. ஏதோ துஷ்ட நோக்கத்துடன் தீயசெயல் புரிவதற்கே வந்திருக்கிறான். அவன் அவ்விதம் தீச்செயல் புரியாமல் தடுப்பது கந்தமாறனின் உயிர் நண்பனாகிய தன் கடமையல்லவா? தனக்கு அன்புடன் ஒரு வேளை அன்னம் அளித்தவர்களின் வீட்டுக்கு நேரக்கூடிய தீங்கைத் தடுக்காமல் தான் சும்மா படுத்துக் கொண்டிருப்பதா?

வல்லவரையன் துள்ளி எழுந்தான். பக்கத்தில் கழற்றி வைத்திருந்த உறையுடன் சேர்ந்த கத்தியை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான். ஆழ்வார்க்கடியானுடைய தலை காணப்பட்ட திக்கை நோக்கி நடந்தான்.

மாளிகை மேல்மாடத்தில் ஒரு மூலையிலிருந்த மண்டபத்தில் அல்லவா வல்லவரையன் படுத்திருந்தான்? அங்கிருந்து புறப்பட்டு மதில் சுவரை நோக்கி நடந்தபோது, மேல்மாடத்தை அலங்கரித்த மண்டபச் சிகரங்கள், மேடைகள், விமான ஸ்தூபிகள், தூண்கள் ஆகியவற்றை கடந்தும் தாண்டியும் சுற்றி வளைத்தும் நடக்க வேண்டியதாயிருந்தது.

சற்று தூரம் அவ்விதம் நடந்த பிறகு, திடீரென்று எங்கிருந்தோ பேச்சுக் குரல் வந்ததைக் கேட்டு, வல்லவரையன் தயங்கி நின்றான். அங்கிருந்த ஒரு தூணைப் பிடித்துக் கொண்டு, தூணின் மறைவில் நின்றபடி எட்டிப் பார்த்தான். கீழே குறுகலான முற்றம் ஒன்றில், மூன்று பக்கமும் நெடுஞ்சுவர்கள் சூழ்ந்திருந்த இடத்தில் பத்துப் பன்னிரெண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# தலைக்குனிவு

(நேற்றைய தொடர்ச்சி)

அது கண்டு அவரது சீடர்கள் யாராவது உதவுங்கள் என்று உரக்கக் கூறினார்கள். ஆனால் மித்திரவசு சற்றும் பயப்படாமல் அம்முதலையை உற்றுப் பார்க்கவே அது துடிதுடித்து இறந்து போயிற்று. இதனால் மித்திரவசு தன் தவவலிமை மிக அதிகம் என கர்வப்பட்டுக் கொண்டார்.

இதற்கு இரண்டு நாட்களுக்குப் பின் அவர் தம் சீடர்களோடு ஆடுதுறையை அடைந்து தருமனின் வீட்டிற்குச் சென்றார். அப்போது தருமனின் மனைவி வாசல் கதவோரம் உட்கார்ந்து கொண்டு பழம் புடவையின் கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்தாள். அவள் மித்திரவசு வருவதைக் கண்டதும் "ஐயா! என் கணவர் வெளியே போயிருக்கிறார். அவர் வரும் வரை வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருங்கள்" என்று கூறினாள்.

தன்னைப் போன்ற மாமுனிவரை வீட்டிற்குள் அழைத்து உட்கார வைக்காமல் திண்ணையில் அவள் இருக்கச் சொல்லி விட்டாளே என்று மித்திரவசுவிற்குக் கோபம் வந்தது. கதவோரம் உட்கார்ந்திருந்த தருமனின் மனைவியை அவர் முறைத்துப் பார்த்தார். ஆனால் ஆற்றில் முதலை துடிதுடித்தது போல அவள் நடுநடுங்கித் துடிக்கவில்லை.

இதனால் மித்திரவசுவின் கர்வம் சற்று அடங்கியது. இதற்குள் தருமனும் வந்து விட்டான். தன்னைத் தேடி வந்த



அவர்களைத் தன் வீட்டிற்குள் அவன் அழைத்தும் சென்றான். தர்மனின் மனைவி எல்லோருக்கும் உணவு படைத்தாள். தருமன் கையில் விசிறியுடன் நின்றான்.

அவர்களுக்கு பரிமாறப்பட்ட உணவு ஆறிப் போயிருந்தது. மித்திரவசு கேலியாக "அடேயப்பா! சாதம் எவ்வளவு சூடாக இருக்கிறது!" என்றார். எனவே தருமன் விசிறி கொண்டு வீசினான். என்ன ஆச்சரியம்! ஆறிப்போன சாதம் சூடாகி அதிலிருந்து ஆவியும் எழுந்தது! அது கண்டு மித்திரவசு திகைத்துப் போனார்.

அவர்கள் எல்லோரும் கை அலம்பக் கிணற்றடிக்குச் சென்றபோது நீர் நிறைந்த குடம் ராட்டினத்தில் ஒரு புறம் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு திகைத்தார்கள். அப்போது அங்கு வந்த தருமனின் மனைவி "தண்ணீர் சேந்திக் கொண்டிருந்தபோது என் கணவர் கூப்பிட்டதால் குடத்தைப் பாதியிலே இழுக்கும்போது விட்டுவிட்டுப் போய் விட்டேன்" என்றாள்.

அவளது சக்திக்கு முன் தன் சக்தி ஒன்றுமே இல்லை என மித்திரவசு தெரிந்து கொண்டார். அவர் தருமனை வணங்கி "ஐயா! தவம் செய்யாதவர்களுக்குக் கூட பகவான் மோட்சத்தை அளிப்பாரா?" என்று கேட்டார்.

தருமனும் "தூய மனதுடன் யார் அவரை வழிபட்டாலும் அவர் மோட்சத்தை அளிப்பார். இதற்காகக் காட்டிற்குப் போய் கடுந்தவம் செய்ய வேண்டும் என்பதெல்லாம் இல்லை" என்றான்.

மித்திரவசுவுக்கு அப்போது உண்மை விளங்கியது. அவரது கர்வம் ஒழிந்தது. தன் போன்ற தவயோகிகளால்தான் பகவானை அடைய முடியும் என தான் நினைத்தது எவ்வளவு தவறு என எண்ணி அவர் தலை குனிந்து கொண்டார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு கண்ட பரமேஸ்வராக் கல்லூரி

## இன்று மலர் வெளியீட்டு விழா

பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலர் வெளியீடு இன்று (11.11.2022) பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெகு விமர்சையாக கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. மலர் வெளியீட்டு விழாவுக்கு அழைக்கப்பட்டவர்கள் -பரமேஸ்வரன் ஆலயத்தில் வைத்து வரவேற்கப்பட்டு விழா அரங்கிற்கு அழைத்துச் செல்லப் படுவார்கள். கடவுள் வாழ்த்து, கல்லூரி கீதம், தமிழ்த்தாய் வாழ்த்துடன் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்துடனும் மலர் வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலிருந்தும் இசைக்கல்லூரியிலிருந்தும் ஆசிரியர்கள், மாணவிகள் பங்குபற்றும் நாட்டிய நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

மலர் வெளியீட்டு விழாவுக்கு பேராசிரியர் திருமதி.சுபதினி ரமேஸ் தலைமை தாங்குவார். பேராசிரியர் சுபதினி ரமேஸ் விழாவை ஒழுங்குபடுத்தல் பொறுப்பையும் ஏற்று திறம்படச் செய்துள்ளார். பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் ஸ்ரீசற்குணராஜாவும் முன்னாள் உபவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் அழைக்கப் பட்டுள்ளனர்.

சட்டத்தரணி கனக.நமநாதன், பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் யோக. தயாளன், பழைய மாணவர் ஆர். சிவசுப்பிரமணியம் ஆகியோரும் விழாக் குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

பழைய நினைவுகளை மனக்கண் முன்னே நிறுத்தி மீள ஞாபகப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியாகவே பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர் வெளியீடு அமையும்எனலாம். 1921ஆம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் பாரமெடுக்கப்பட்டு யாழ்.பல்கலைக் கழகமாக மாற்றப்பட்ட நாள் வரை சிறந்த கல்வி அறிவையும் ஆன்மிகச் சிந்தனையையும் இந்து சமய வழிபாட்டுப் பண்பாட்டையும் பாரம்பரிய கலை கலாசார உணர்வுகளோடும் இயல், இசை, நாடக ஈடுபாட்டுடனும் மாணவர்களுக்கு போதித்து வந்திருந்ததை அங்கு படித்த பழைய மாணவர்கள் என்றும் மறந்திருக்க மாட்டார்கள். அந்தக் காலம் ஒரு பொற் காலமாகும்.



வள்ளல் சேர்.பொன்.இராமநாதன் ஓர் அரசியல்வாதியாக இருந்து கொண்டே இரு கல்விக்கூடங்களை யாழ்ப்பாணத்தில் நிறுவியுள்ளார். பெண்கள் படிப்பதற்காக மருதனார்மடத்தில் இராமநாதன் கல்லூரியையும் திருநெல்வேலியில் ஆண்கள் படிப்பதற்காக பரமேஸ்வரா கல்லூரியையும் நிறுவியதால் இவ்விரு கிராமங்களுமே பாக்கியம் பெற்றவைகளாயின. இந்த இரண்டு கிராமங்களில் வதியும் மக்களும் தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியறிவை பெற்றுக் கொடுக்க கிடைத்த வசதி வாய்ப்பையிட்டு உளம் மகிழ்வு கொண்டிருந்தார்கள்.

அந்த வகையில் ஊரும் பாடசாலையும் இணைக்கப்பட்டு இருந்தன. திருநெல்வேலி பிள்ளைகள் எல்லோருமே பரமேஸ்வராக் கல்லூரியில் தான் கல்வி கற்று வந்திருந்தார்கள். ஆரம்பக் கல்வியை பலர் சைவப் பாடசாலை என அழைக்கப்பட்ட தற்போதைய பரமேஸ்வரா வித்தியாலயத்திலும் அதன்பின் பரமேஸ்வராக் கல்லூரியிலும் படித்து வந்தார்கள்.

கல்வியங்காடு, நல்லூர், கந்தர்மடம், கொக்குவில், கோண்டாவில், இருபாலை போன்ற அயல் கிராமங்களிலிருந்து மட்டுமல்லாமல் தெல்லிப்பழை, மல்லாகம் , சுன்னாகம், இணுவில் போன்ற இடங்களிலிருந்தும் புகையிரத வண்டி மூலம் படிக்க வந்தவர்களும் உண்டு. பரமேஸ்வராக் கல்லூரியில் விடுதி வசதியும் இருந்தது. அங்கு தங்கியிருந்து கற்பதற்கு தீவகம், வவுனியா ஓமந்தை, பூநகரி, மன்னார், முல்லைத்தீவு போன்ற தூர இடங்களிலிருந்தும் பிள்ளைகள் வந்து விடுதியில் தங்கி படித்துக் கொண்டிருந்தார்கள்.

உதைபந்தாட்டத்தில் கல்லூரி மாணவர்கள் சிறப்பாக விளையாடியுள்ளார்கள். 1946 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது அணியும் 1953, 1954, 1955 ஆகிய ஆண்டுகளில் இரண்டாவது அணியும் சம்பியன் பட்டத்தை பெற்றிருந்தன. இயல், இசை, நாடகம் போன்றவற்றில் கல்லூரி மிகுந்த ஈடுபாடு கொண்டிருந் தது. பல நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டுள்ளன.

இலங்கை வானொலியில் 'லண்டன் கந்தையா' என்ற நாடகத்தை இயக்கி நடித்தவர் கல்லூரியின் ஓர் ஆசிரியராக பணியாற்றியவர். அவர் 'சானா' என்றழைக்கப்படும் சண்முக நாதன் என்பவராவார். அப்போது அங்கு படித்த மாணவர்கள் சிலரை இலங்கை வானொலியில் நிரந்தர நடிகராக்கியுள்ளார். அப்புக்குட்டி,ராஜகோபால்,தர்மலிங்கம், கனகலிங்கம் ஆகியோர் நிரந்தர நடிகர்களானார்கள்.

வருடாவருடம் ஒரு மாதத்தில் பத்து நாட்களுக்கு இசைக் கச்சேரிகள் நடைபெறும். யாழ்பாணத்திலுள்ள சிறந்த இசைக் கலைஞர்களை வரவழைத்து மாலையில் தொடங்கி இரவு பத்து மணி வரை இசைக் கச்சேரி நடைபெறும். நான்கு நாயன்மார்களின் குருபூசையும் வருடம் தோறும் பரமேஸ்வரன் ஆலயத்தில் கொண்டாடப்படும்.

இவ்வாறான வகையில் கல்வி,கற்பித்தல் செயற்பாடு திருநெல்வேலியில் அன்று சிறந்த முறையில் இடம்பெற்றிருந்தது. ஆனால் தற்போது மக்கள் தமது பிள்ளைகளை நகரத்திலுள்ள பாடசாலைகளுக்கு பேருந்து, வான், ஓட்டோ போன்ற வாகனங்கள் மூலமாக பணம் செலவழித்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலியில் ஒரு தரமான பாடசாலை தற்போது இல்லை என்பது யாவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மை. மீண்டும் திருநெல்வேலியில் பழைய நிலைமையை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் சைவப் பாடசாலை என்றிருந்த இந்து தமிழ் கலவன் பாடசாலை 2012 ஆம் ஆண்டு பரமேஸ்வரா வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அப்பாடசாலையை பரமேஸ்வராக் கல்லூரியாக்கி ஏ.எல் வகுப்பு வரை கற்கக் கூடியதாக நிறுவ வேண்டும் என்ற ஆவல் கிராம மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதை சாதிக்க பரமேஸ்வராக் கல்லூரிபழைய மாணவர்களும் பரமேஸ்வரா வித்தியாலய பழைய மாணவர்களும் மற்றும் இரண்டு கல்விக்கூடங்களின் நலன் விரும்பிகளும் ஒன்றிணைந்து செயலாற்ற முன் வர வேண்டும்.

**சட்டத்தரணி கனக.நமநாதன்**

## நடுக்கடலில் தத்தளித்த

# 303 இலங்கையர்களும் தூதரகத்தில் ஒப்படைப்பு

## வியட்நாம் வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(வியட்நாம்)

சிங்கப்பூருக்கு அருகில் வியட்நாம் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த படகில் இருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையர்களும் ஹோசிமினில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதனை வியட்நாம் வெளிவிவகார அமைச்சு உறுதி செய்துள்ளது. மீட்கப்பட்ட அனைவரும் நிலையான உடல்நிலையில் இருப்பதாகவும் அவர்களுக்கு தற்காலிக தங்குமிடங்களை வழங்க உடனடி நடவடிக்கை எடுக கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அவர்களது குடியுரிமை மற்றும் ஏனைய தகவல்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கையின் பின்னர் அவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்துவர தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்கு அருகில் சர்வதேச கடற்பரப்பில் 303 இலங்கையர்களுடனான படகு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பாதிக்கப்பட்டது.

இதனையடுத்து, கப்பலில் இருந்த இலங்கையர் [illegible] இலங்கை கடற்படை மீ[illegible]டிக்கை மையத்தை தொடர்பு கொண்டு இது குறித்து தகவல் அளித்துள்ளார்.

உடனடியாக செயற்பட்ட கொழும்பு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவிகளைக் கோரியது.

அதன்படி, குறித்த நாடுகள் முன்னெடுத்த நடவடிக்கையில், ஆபத்தில் இருந்த படகுக்கு அருகில் சென்றுகொண்டிருந்த ஜப்பானிய சரக்குக் கப்பல், இலங்கையர்களைக் காப்பாற்றியது.

மீட்கப்பட்டவர்களில் 264 [illegible] 20 [illegible] உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மைக்கான அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கியினால் முன் வைக்கப்பட்ட அறிக்கையின்படி, இதுவரையான வருடத்தின் இரண்டாம் பாதியில் இவ்வாறு அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கைப் பொருளாதாரம் வலுவான நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி)

## இந்தியாவில் நிலநடுக்கம்

(டில்லி)

இந்தியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அருணாச்சல பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை 10.31 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 10 கி.மீ ஆழத்தில் ரிக்டர் அளவுகோலில் 5.7 ஆக பதிவானதாகவும் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

சேத விபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரையில் வெளியாகவில்லை. (நி)

# போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்
# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2023

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2023 ம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1000.00 ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக் கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2023"** எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு **2022.11.30** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். மேலும் இது தொடர்பான விபரங்களை யாழ்.போதனா வைத்தியசாலை இணையத்தளத்தில் www.thjaffna.lk பார்வையிடலாம்.

| உருப்படி இல | பொது பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுது பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள்,கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதி பண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTV கமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள், நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை,போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A –11 | எல்லா விதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணி துவைக்கும் தூள், பார் சவர்க்காரம் சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப் , பற்றிகள் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லா விதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகல வகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன், பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A –16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை தின முத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப்பானங்கள். |
| A – 18 | LP வாயு மற்றும் வாயுரெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய். |
| A – 19 | சத்திரசிகிச்சைக்குத் தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதி, சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணை உறை, GS Towel) |
| A – 20 | அலுவலக அடையாள அட்டை மற்றும் பெயர்ப்பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உன்ற மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG , EEG recording paper & other such things) |
| B-05 | சத்திர சிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திர சிகிச்சைத் துணையுறுப்புகள் / X கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம், புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக்குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C – 12 | தையல் வேலைகள். |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகல விதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிட நிர்மாணம், கட்டிட புனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மாண வேலைகள். |
| E – 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்ரிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகல விதமான பொருட்கள், அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G–01 | (சிற்றுண்டிவகைகள்,உணவுப்பொதிகள்மற்றும்குளிர்பானங்கள்போன்றவை) |

**நியந்தனைகள்:**

01. வழங்கல்கள், சேவைகள் 2023 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களி லிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
03. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
04. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
05. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
06. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
07. வழங்குநர்களைப் பதிவு செய்யும் போது வியாபாரப் பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.
08. மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
09. உருப்படி இலக்கம் B [அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவப் பொருட்கள்] க்கு நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். தயாரிப்பு எல்லை [Product range]
    உற்பத்தியாளர் அங்கீகாரக்கடிதம் [Copy of manufacturer authorization letter]
    CDDA நகல் நிறுவுதல் அடிப்படை - [Installation Base] (இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க முடியும்)

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| காசுபற்றுச்சீட்டு/ காசுகட்டளைஇல: | |
| திகதி: | |
| தொகை: | |

**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப் பாணம்.**

1. நிறுவனத்தின் பெயர் :
2. நிறுவனத்தின் முகவரி :
3. தொலைபேசி இல. :
4. தொலைநகல் இல. :
5. மின்னஞ்சல் முகவரி :
6. வியாபாரப் பதிவுபெயர் :
   (வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
7. VAT:பதிவு இலக்கம் :
8. கடன் வசதி பற்றிய விபரம் (கால எல்லை/தொகை):

| உருப்படி இலக்கம் | வழங்கல்/சேவை விபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிப்பதுடன் ரூபா.....க்குரிய பற்றுச்சீட்டு/காசுக்கட்டளை இத்துடன் இணைத்துள்ளேன்.

.............................. ..............................
விண்ணப்பதாரியின் பெயர் விண்ணப்பதாரியின் ஒப்பமும் நிறுவன இறப்பர் முத்திரையும்

..............
திகதி

(C-5239)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கண் பார்வை அற்றவன் குருடன் அல்ல தன் குற்றங்களை உணராதவனே குருடன்.
> – மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கண்டபாட்டில் நடக்கும் களவு நடுக்கத்தில் பொதுமக்கள்

வட மாகாணத்தில் களவும் போதைவஸ்தும் தலைவிரித்தாடுகின்றன.

இதில் போதைவஸ்து தொடர்பில் விழிப்புணர்வுக் கூட்டங்களும் மாநாடுகளும் நடந்த வண்ணமுள்ளன.

இதற்கும் மேலாக, போதைக்கு அடிமையான தங்கள் பிள்ளைகளுக்குப் புனர்வாழ்வு வழங்குங்கள் என்று பெற்றோர்களே கேட்குமளவுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபடுகின்றவர்களை வலைவிரித்துத் தேடுகின்ற நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக போதைவஸ்து தொடர்பில் பெற்றோர்களும் பாடசாலை நிர்வாகங்களும் அதிகவனம் செலுத்துவதால், போதைப் பொருள் வியாபாரிகளால் தங்கள் வியாபாரத்தை முன்னெடுப்பது கடினமாகியுள்ளது.

ஆம், போதைவஸ்து தொடர்பான விழிப்புணர்வும் கருசனையும் தொடர்ந்து வலுவடையும்போது போதைவஸ்து பாவனை என்பது முற்றாகத் தடுக்கப்படும் வாய்ப்பு உண்டு.

ஆனால் வட மாகாணத்திலுள்ள ஒட்டுமொத்த மக்களையும் நடுங்க வைப்பதாக இருக்கக்கூடிய களவும் கொள்ளையும் சண்டமாருதம் கொண்டுள்ளது.

உண்மை. அண்மைக்காலமாக வட மாகாணத்தில் இம்மை மறுமையின்றி களவு நடந்தாகிறது.

எனினும் களவெடுப்பவர்கள் சுதந்திரமாக நடமாடுவதுடன் சாதாரண மக்களை அவர்கள் அச்சுறுத்துபவர்களாக இருப்பதும் மிகப் பெரும் பயங்கரம்.

தவிர, ஆட்கள் இருக்கின்ற வீடுகளுக்குள் கூட எந்தவித அச்சமுமின்றி கொள்ளையர்கள் நுழைகின்றனர்.

இவ்வாறு நுழைவதற்கு முன்னதாக களவுடன் சம்பந்தப்பட்ட இன்னொரு தரப்பு நோட்டமிட்டு தகவல்களை வழங்கிக் கொள்கிறது.

இதன்காரணமாக வீடுகளில் இருப்பதுகூட ஆபத்து என்று கருதுமளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

அதேநேரம் களவு தொடர்பில் கைது செய்யப்படுபவர்களுக்கு ஏதோவொரு வகையில் பிணை கிடைத்துவிடுகிறது.

பிணை கிடைக்கப் பெற்றவர்கள் மீண்டும் களவில் ஈடுபடுகின்றனர்.

போதைவஸ்துக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்படுகின்ற அதேநேரம் களவில் ஈடுபட்டவருக்கு பிணை வழங்கப்படுகிறதெனும்போது களவுத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதற்குப் பொதுமக்கள் தயங்குவர் என்பது தவிர்க்க முடியாததே.

ஆக, வட மாகாணத்தில் கண்டபாட்டில் நடக்கும் களவை அடியோடு தடுத்து நிறுத்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் களவில் ஈடுபடுவர்களைத் தடுத்து வைத்து அவர்களைத் திருத்தி எடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் வடபகுதியில் களவு உச்சமடைந்து பொது மக்கள் புலம்பெயருகின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# இன, மத அடையாளங்களுடன் செயற்படும் கட்சிகளை இல்லாமல் செய்ய வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்

(கொழும்பு)

இலங்கையில் இன, மத அடையாளங்களுடன் செயற்படும் கட்சிகளை எதிர்காலத்தில் இல்லாமல் செய்யவேண்டிய தேவையுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி புஞ்சிஹேவா தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், பெண்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளடக்கப்படாத தேர்தல் ஒன்று நியாயமான தேர்தலாக உள்ளடக்கப்பட முடியாது. முறைப்படுத்தல் செயற்பாடுகள் நியாயமான ரீதியில் முன்னெடுக்கப்படவேண்டும். தேர்தல்கள் மூலம் பெண்கள், இளைஞர்கள் அனைத்து துறைகளிலும் உள்ளடக்கப்பட வேண்டும்.

தேர்தல் முறைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையில் சிறந்த அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை தேர்தல் சட்டத்தில் செயற்படுத்தப்பட வேண்டும். ஒரு அரசியலில் பிரவேசிக்கும் உறுப்பினரின் சொத்து விபரங்களை பொதுமக்கள் அறியவேண்டும்.ஒருவர் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவாராயின் அவரது பதவி பறிக்கப்படும் வகையில் ஏற்பாடுகள் அமைய வேண்டும்.

இன,மத என்ற அடிப்படையில் 1933 ஆம் ஆண்டு தொடக்கம் இன ரீதியான கட்சிகள் தோற்றம் பெற்றன. இவ்வாறான கட்சிகள் மூலம் பிரித்தாளும் நிலைமையினை இல்லாமல் செய்ய வேண்டும். இவ்வாறான கட்சிகளுக்கு எதிராகவும் சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலையுள்ளது.

மாகாணசபை தேர்தல்கள் நடைபெற்று நீண்டகாலம் சென்றுள்ளது. இன்று மாகாணசபைகள் உள்ளதா என்னும் நிலை காணப்படுகின்றது.மக்கள் சபைகளை வேறு நபர்கள் ஆட்சிசெய்வதற்கு அனுமதிக்கமுடியாது. நாங்கள் சில விடயங்களை செய்ய வேண்டும். இல்லாது போனால் எமது எதிர்கால சமூகத்திற்கு நாங்கள் பொறுப்புக்கூறவேண்டிய நிலையேற்படும் என தெரிவித்தார். (4-7)

## தேர்தலை நடத்தாமல் நாணய நிதியத்தின் ஆதரவு கிடைக்காது

### பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய காலத்தில் தேர்தலை நடத்தாமல் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை எதிர்பார்க்க முடியாது என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசாங்கம் தயார் செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## வெளிநாடு செல்ல முயற்சித்த 586 பேர்

### திருப்பி அனுப்பப்பட்டனர்

சுற்றுலா வீசா மூலம், தொழில்வாய்ப்புக்காக சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 586 பேர், பதிவுசெய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

இந்த ஆண்டின், இதுவரையான காலப்பகுதியில், சுற்றுலா வீசாவைப் பயன்படுத்தி, அவர்கள் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கு செல்ல முயற்சித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், சுற்றுலா வீசா மூலம், வீட்டு வேலை மற்றும் திறன்சாரா துறைகளில் தொழிலுக்காக, பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்வதை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானம் இன்று முதல் அமுலுக்கு வரவுள்ளது. (4-7)

## கசிப்பு காய்ச்சிய இளைஞர் கைது

யாழ்ப்பாணத்தில் கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, வாதரவத்தை பெரிய பொக்கனை பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 3 லீட்டர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் போது 20வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (4-7)

## அடுத்த வாரத்தில் இருந்து நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு அட்டை வடிவிலான நிலையான சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற சுமார் 6 இலட்சம் பேருக்கு அட்டை அமைப்பிலான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர் சில வாரங்களில் இந்த அட்டை விநியோகப் பணிகள் நிறைவடையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடும் அட்டைகளில் இதுவரை 5 இலட்சம் அட்டைகள் இலங்கையை வந்தடைந்துள்ளதாகவும் மிகுதியான 5 இலட்சம் அட்டைகள் எதிர்வரும் காலங்களில் பெற்றுக் கொள்ளப்படும் என அவர்மேலும் தெரிவித்தார். (நி)

## பல்கலை பகிடிவதை விசாரணைகள் சி.ஐ.டி யினரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக பகிடிவதை சம்பவங்கள் குறித்து இனிமேல் சி.ஐ.டி.யினரே விசாரணைகளை முன்னெடுப்பர் என பொலிஸ் தலைமையகம் நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

இதற்கமைய இனி எந்தவொரு பொலிஸ் பிரிவிலும் பதிவாகும் பகிடிவதை தொடர்பிலும் சி.ஐ.டி.யினரே விசாரணைகளை முன்னெடுப்பர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மேலும் குற்றவியல் நடைமுறை சட்டக் கோவைக்கு அமைய இவ்வாறு அவை பொலிஸ் மா அதிபரால் சி.ஐ.டி.யினருக்கு விசாரணைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022**

"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்"
*- ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கை வியலாளர்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான பயணத்திற்கு இடையூறு விளைவிக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

(நெளுக்குளம்)

**வவுனியா ஓமந்தை ஏ9 வீதியில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் அப்பகுதியில் பயணம் மேற்கொள்ளும் வாகனங்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆபத்தான பயணத்தை எதிர்கொள்கின்றனர்.**

தற்போது மழையுடனான காலநிலை காரணமாக கட்டாக்காலி கால்நடைகள் வீதிகளில் நின்று பயணம் மேற்கொள்பவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகின்றன. இதனால் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இதன் காரணமாக அப்பகுதியில் பாதுகாப்பான பயணம் மேற்கொள்ள முடிவதில்லை. எனவே கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை கட்டி வைத்து பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பொலிஸார் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-299)



மு/மல்லாவி மத்திய கல்லூரி சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

# தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன ஆணையாளர் நியமனம்

(முறிகண்டி)

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் பிரதம பேராயரின் விசேட ஆணையாளராக திருச்சி - தஞ்சாவூர் ஆதீனத்தின் பேராயர் கலாநிதி. டி.சந்திரசேகரன் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பதவி நிலையில் இருந்த பேராயர் டி.எஸ்.தியாகராஜா ஓய்வு பெற்றுள்ள நிலையில், புதிய பேராயர் நியமிக்கப்படும் வரை இவர் விசேட ஆணையாளராக செயற்படுவார்.

அதற்கான நியமனக்கடிதத்தை நேற்று முன்தினம் பிரதம பேராயர் கலாநிதி.ஏ.தர்மராஜ் ரசாலம் வழங்கினார். (நி-6-100)

# "கலாநேத்ரா" விருதுக்கான விண்ணப்பம் கோரல்

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து வழங்கும் "கலாநேத்ரா" விருதிற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்த கலைஞர்கள் இவ்விருதிற்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் வவுனியா பிரதேச செயலக பிரிவினை நிரந்தர வதிவிடமாக கொண்டிருத்தல் வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். துறை சார்ந்த ஆவணப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் இவ்விருதினை பெற்ற கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது. துறை சார்ந்த ரீதியில் விருதுத் தெரிவு இடம்பெறும். துறைசார்ந்த நிபுணத்துவமுடைய உறுப்பினர்களை உள்ளடக்கிய 3 பேர்கொண்ட மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு இடம்பெறும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். சிறுகதை, கவிதை; நாவல், கீழைத்தேய இசை, மேலைத்தேய இசை, மரபுக்கலை, நாடக இலக்கியம், சிற்பம், ஓவியம், பரதம், வாத்திய இசை, குறும்படம், இயல், ஊடகம், அறிவிப்பு ஆகிய துறைகளுக்கே குறித்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (6-250)

# மாகாணத்தின் அதிகாரத்தை பறிக்கும் முயற்சியே கொத்தணி பாடசாலைத் திட்டம்

## முன்னாள் மாகாண கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

மாகாண பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக உள்வாங்குவதற்குப் பதிலாக கொத்தணி பாடசாலைகளை உருவாக்குவதற்கான திட்டத்தை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

இது 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முரணானதுடன் மாகாண சபைகள் தொடர்பில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்புக்கும் எதிரானது என வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி. க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னணிப் பாடசாலைகளை மையப்படுத்தி கொத்தணிகள் உருவாக்கப்படும். ஜனவரி மாதத்தில் ஆயிரத்து இருநூறு கொத்தணிகள் அடையாளம் காணப்படும். இதன் மூலம் அண்மித்த பாடசாலைகளுக்கு இடையே பௌதிக வளங்களும் மனித வளங்களும் பரிமாறப்படும். இவை கல்வி அமைச்சரான சுசில் பிரேமஜயந்தவின் புதிய அறிவிப்புகளாகும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் கல்வி மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட விடயமாகும். மாகாணங்களுக்கான கல்விக் கொள்கைகளை வகுத்தல், பாடவிதானங்களைத் தயாரித்தல், பாடசாலைகளை நிர்வகித்தல், வளங்கள் மற்றும் வளப்பகிர்வுகள் தொடர்பில் முடிவெடுத்தல் இவை அனைத்துக்கும் மேலாக, மாகாணப் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் ஆகியவை மாகாணக் கல்வி அமைச்சுக்கு உரிய அதிகாரங்கள் ஆகும்.

அதனை மீறும் வகையில் மாகாணங்களுக்கு உரித்தான அதிகாரங்கள் மீது மத்தியால் வெளியிடப்படும் கொள்கை மாகாணங்களுக்குப் பொருந்தாத விடத்து மாகாணங்கள் அதனை நிராகரித்து தமக்கான பொருத் தமான திட்டங்ககளை உருவாக்கிச் செயற்படுத்த முடியும்.

அவசியம் ஏற்படின், அனைத்து மாகாணக் கல்வி அமைச்சர்களின் ஆய்வுகளின் அடிப்படையில் எல்லா மாகாணங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கல்விக்கொள்கை உருவாக்கப்படும் பட்சத்தில், அவற்றை அந்தந்த மாகாணங்கள் சட்டமாக்கிச் செயற்படுத்த முடியும்.

கல்வி அமைச்சரால் வெளியிடப்பட்ட இந்தக் கொத்தணி முறை திட்டமானது 1970 ஆம் ஆண்டுகளில் சிறிமாவோ பண்டார நாயக்கவின் ஆட்சிக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டு பின் படுதோல்வியுடன் கைவிடப்பட்ட ஒரு திட்டமாகும்.

பாடசாலைகளின் சமத்துவமான வளர்ச்சிக்கு புதிய திட்டங்களே தேவை. அதனை அந்தந்த மாகாணங்கள் தமது வளங்களுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப உருவாக்கிச் செயற்படுத்தினாலே போதுமானது என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 200 |
| தக்காளி | 450 | 400 | 450 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 150 | 180 | 150 |
| கோவா | 350 | 300 | 300 | 320 |
| கரட் | 300 | 420 | 400 | 450 |
| பூசணி | 150 | 150 | 150 | 200 |
| புடோல் | 260 | 300 | 150 | 250 |
| வாழைக்காய் | 150 | 160 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 450 | 600 |
| பெரிய வெங்காயம் | 320 | 250 | 300 | 350 |
| பாகற்காய் | 600 | 600 | 450 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 160 | 180 |
| பயற்றங்காய் | 600 | 400 | 300 | 320 |
| லீக்ஸ் | 300 | 350 | 320 | 350 |
| பீற்றூட் | 180 | 250 | 300 | 300 |
| கறிமிளகாய் | 700 | 800 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 450 | 600 |
| போஞ்சி | 350 | 400 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 450 | 250 | --- | 450 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 200 | 150 |
| தேசிக்காய் | 350 | 450 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 250 | 240 | 280 |
| வெங்காயப்பூ | --- | 400 | --- | 500 |
| முள்ளங்கி | 140 | 160 | 160 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 140 | 120 | 150 |

# முத்திரைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் உபதபாலகத்தின் ஏற்பாட்டில் போதை அற்ற சமூகத்தினை உருவாக்க மாணவர் சமூகத்திடம் 'முத்திரை சேகரித்தலை ஊக்குவிப்போம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள முத்திரைக் கண்காட்சி எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (6)

# முட்கொம்பன் பகுதியில் அதிகரிக்கும் போதைப்பாவனை

## கட்டுப்படுத்துமாறு கோரி மகஜர் கையளிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி முட்கொம்பன் பகுதியில் அதிகரித்து காணப்படும் போதைப்பொருள் பாவனைகளை கட்டுப்படுத்துமாறு கோரி கிராமிய மதுபோதைப் பொருள் தடுப்பு குழுவினால் வடமாகாண ஆளுநர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்டோருக்கான மகஜர் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முட்கொம்பன் கிராமத்தில் சட்ட விரோதக் கசிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனை என்பன அண்மைய நாட்களாக அதிகரித்துச் செல்வதுடன் தற்கொலைகள், வழிப்பறிக் கொள்ளைகள் எனப் பல்வேறு குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

குறிப்பாக தமது கிராமத்தில் வேறு பிரதேசங்களைச் சேர்ந்த நபர்கள் தமது கிராமத்துக்குள் வருகை தந்து மது அருந்திவிட்டு வீதிகளிலும் பொது இடங்களிலும் மது போதையில் விழுந்து கிடப்பதுடன் போக்குவரத்துக்கும் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருவதுடன் பல குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனை கட்டுப்படுத்தக்கோரி மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டது. (6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுட் காலம்...

தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஐஸ் என்ற போதைப் பொருள் பயங்கரமான ஒரு போதைப் பொருள். அது தொடர்பில் பல நிபுணத்துவ வைத்தியர்களின் கருத்துக்களை பெற்றுக்கொண்டுள்ளோம்.

ஏனைய போதைப் பொருட்களைவிட இது மிகவும் பயங்கரமானது. இந்த போதைப் பொருளானது மூளையின் இளையங்களை பாதிப்பதாகவும் மனிதர்களை விகாரப்படுத்துவதாகவும் அறியக் கிடைத்துள்ளது என தெரிவித்தார். (4-7)

## 14ஆம் திகதி...

யாழ்ப்பாணத்துக்கு வடக்காக இந்தியாவின் தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்துக்கு அண்மையாக கரையைக் கடக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது என யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இந்த ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலத்தினால் ஏற்படும் காற்றினால் சேதம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகும்.

எனினும் நாட்டின் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு பகுதிகளில் பரவலாக கன மழை முதல் மிகக்கன மழைக்கான வாய்ப்புள்ளது.

இந்த தீவிர தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 14 திகதி வரை மழை கிடைக்கும். மேற் கூறிய பகுதிகளில் நேற்று முதல் எதிர்வரும் 14 வரையான காலப்பகுதியில் திரட்டிய மழையாக 250 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஏற்கனவே வடக்கில் தற்போது கிடைத்து வரும் மழையினால் நிலம் நிரம்பிய நிலையில் காணப்படுகிறது. இந்த நிலையில் தொடர்ச்சியாக மழை கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

அத்தோடு இன்றுமுதல் வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு மற்றும் வடமேற்கு பகுதி கடற்பகுதிகள் மிகவும் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது. என மேலும் தெரிவித்தார். (4-7)

## யாழ். இந்திய...

பட்டுள்ளது.

வாகனம் ஒன்றில் பயணித்த ஒருவர் மது போதையில் கண்ணாடிக்கிளாஸ் ஒன்றை தவறுதலாக வீசியதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அவர் பயணித்த வாகனமும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (4-7,33,104)

## தாயும் குழந்தை...

ரது கண்ணீர் அஞ்சலி போஸ்டர் மற்றும் குழந்தையை தாக்கும் காணொளி என்பன சமூக ஊடகங்களில்வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் அதிக கவனம் எடுத்த ஊர்காவற்துறை பொது சுகாதார வைத்திய மருத்துவர் பரா.நந்தகுமாரின் தலைமையிலான குழுவினர்கள் நேற்று காலை குழந்தையை மீட்டனர்.

மோசமாக தாக்கப்பட்ட ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த குறித்த குழந்தையும் தாயும், திருகோணமலையிலிருந்து தப்பி வந்து யாழ். பண்ணை பாலத்தடியில் செய்வதறியாது நின்ற போதே அவர்கள் மீட்கப்பட்டார்கள்.

அவர்கள் வட மாகாண சிறுவர் பராமரிப்பு திணைக்களத்திடம்தற்போது ஒப்படைக்கப்பட்டு, மருத்துவ பரிசோதனைகளுக்காக அவர்கள் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (4-7,104)

## "அரசியல் தீர்வுக்...

தடி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரனை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று வியாழக்கிழமை மதியம் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் பிரகடனத்தை கையளித்தனர். (4-7,33,104)

## சட்டத்தரணி...

மைவெளி பகுதியில் உள்ள காணி ஒன்று அதன் இறந்து விட்ட உரிமையாளர்களான தம்பதியின் போலிக் கையொப்பங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட உறுதியினால் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் கடந்த ஒருவாரகாலமாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் சட்டத்தரணி உட்பட 10பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சட்டத்தரணி மற்றும் முன்னாள் அதிபர் ஆகியோர் இருவரும் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7,33,104)

## திருட்டுக் கும்பல்...

டுள்ளனர்.

அவர்களுக்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மேலும் இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 60 தங்கப் பவுண் நகைகள் மற்றும் ஒருதொகை பணமும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையின் போது வேலணை, அராலி வீதியில் உள்ள வீடொன்றில் 20 பவுண் தங்க நகைகளும் வங்களாவடி பகுதியில் உள்ள விடொன்றில் 7 1/2 பவுண் நகைகளும் சுருவில் பகுதியில் உள்ள விடொன்றில் 13 பவுண் நகைகளும் புங்குடுதீவு பகுதியில் உள்ள வீடொன்றில் 3 பவுண் நகைகளும் திருடப் பட்டமை கண்டறியப்பட்டது.

அத்துடன், முழுங்காவில் மற்றும் காரைநகர் பகுதியில் உள்ள இரு வேறு வீடுகளில் 11 பவுண் நகைகளும் திருடியுள்ளமையை சந்தேக நபர்கள் ஒப்புக்கொண்டு வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

சந்தேக நபர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் நீண்ட காலமாக திருட்டில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்களுக்கு நீதிமன்றங்களினால் 16 பிடியாணை உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரியவந்துள்ளது. (4-7,33)

## வீதியால் சென்ற...

குறித்த கும்பல் அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த நபர் அங்கிருந்தவர்கள் மூலம் காப்பாற்றப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவத்தில், அரியாலை பகுதியைச் சேர்ந்த தர்மரத்தினம் கணேஸ்வரன் (வயது 42) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7,33,104)

## வாகனம் மோதி...

பெண்ணை பின்னால் வந்த சாரதி பயிற்சி பாடசாலையின் வாகனம் மோதி தள்ளியுள்ளது.

சாரதிகளிற்கு பயிற்சி வழங்கி கொண்டிருந்த வேளையே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

இவ் விபத்தில் உயிரிழந்தவர் அதே கிராமத்தை சேர்ந்த முகமது நாசிம் யோகலட்சுமி (வயது-69) என்ற நான்கு பிள்ளைகளின் தாயாராவார்.

இச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (4-7,60)


மஹஜன சம்பத
திகதி 2022/11/10
சீட்டிழுப்பு இலக்கம் 4935
ஆங்கில எழுத்து D — வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 2 0 9 9 2
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.10
சீட்டிழுப்பு இலக்கம் 244
துலாம் 14 29 34 48 துலாம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1283
வெற்றி எழுத்து R — சுப்பர் இலக்க 08 — வெற்றி இலக்கங்கள் 34 43 65 80

கொவிசெத Govisetha
திகதி 2022.11.10 — சீட்டிழுப்பு இலக்கம் 3177
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 33 54 68 69
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.11.10
சீட்டிழுப்பு இலக்கம் - 965
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 19 26 35 47
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 10/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1390
வெற்றி இலக்கங்கள்: மீனம் 2 6 0 9 6 0
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1736
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.11.10
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,760,880/-
வெற்றி இலக்கங்கள் 05 17 29 59 — ஆங்கில எழுத்து J
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.10
சீட்டிழுப்பு இல : 4071
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,700,520/-
வெற்றி இலக்கங்கள் 08 44 48 65 — ஆங்கில எழுத்து F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,255,211.20
திகதி 2022-11-10
வெற்றி வாரம் 3622
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 15 18 38 50 — துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,357,340/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 34 28 56 62 66
சீட்டிழுப்பு வாரம் 1086 — வர்ணம் செம்மஞ்சள் — திகதி 2022.11.10 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 276,209,369.80
தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 543 — திகதி 2022-11-10 — வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 17 36 49 — விதி எண் 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14,071,604/-
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1910 — நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.11.10 — தினம் வியாழக்கிழமை
D 12 14 19 59
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,766,940/-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சுதந்திர தினத்...

இந்த விவகாரத்தில் யாரும் தலையிட வேண்டியதில்லை எனவும், இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து முன்னோக்கிச் செல்லும் திறன் இலங்கைக்கு இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் கூடும் நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் அல்லது நாட்டின் சட்ட அமைப்பை நவீனமயப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சகல சட்ட முறைமைகளையும் இந்த வருடமும் அடுத்த வருடமும் நவீனமயப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் முன்வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி கூறினார். (4-7)

## விவசாயி...

10 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டது.

நீண்ட காலத்தின் பின் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டமையால் பிரதேச விவசாயிகள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெயை பெற்றுச் சென்றனர்

கடந்த சில மாதங்களாகவே விவசாயம் செய்ய தேவையான எரிபொருள் தொடர்ச்சியாக தமக்கு கிடைக்கவில்லை எனவும் தற்போது கிடைக்கப்பெற்றுக்கும் எரிபொருளின் அளவு கூட தமக்கு விவசாய நடவடிக்கை களை முழுமையாக முன்னெடுக்க போதாது என விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்

தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தேவையான எரிபொருள், உரம் உள்ளிட்டவற்றை சரியான காலப் பகுதிக்குள் பெற்றுத்தர உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (4-7)

### நாணய நிதிய

# உடன்படிக்கையை தற்போது பகிரங்கப்படுத்த முடியாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் கையொப்பமிட்டுள்ள உடன்படிக்கையை பேச்சுவார்த்தைகள் நிறைவடையும் வரை பகிரங்கப்படுத்த வேண்டாம் என அவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

மூன்று முக்கிய தரப்புகள் மற்றும் தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச வேண்டியுள்ளது. அதன் பின்னர் ஒப்பந்தத்தில் உள்ள விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)


**விற்பனைக்கு**

CT 100 TL XXXX
H.கிளைமோர்
BAY XXXX

தொடர்பு (13414)
**076 416 9292**

**சேல்ஸ்மான் தேவை**

எமது புடைவை நிறுவனத்துக்கு O/L, A/L படித்தஆண்கள் புடைவைக் கடைக்கு வியாபாரம் பழக ஆர்வமுள்ளவர்கள் தேவை. (13415)

**சென்னை பெசன்**
63, பெரியகடை, யாழ்ப்பாணம்

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை (13412)

தொடர்புகளுக்கு - ஜெயம்
**077 814 7389, 077 986 5457**

**SAM LANKA**
DIRECT IMPORTERS & DISTRIBUTORS

NO:- 367 NAVALAR RAOD, ILLUPPAIYADY JUNCTION, JAFFNA

021 222 1002, 0094 777 46 58 48, 0094 778 20 94 24

SAM LANKA 25% OFF VALID TILL 30th NOVEMBER 2022

KEVILTON Power to Innovate — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS, LED LIGHTS, LED PANEL LIGHTS

ORANGE ELECTRIC — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS, LED LIGHTS, LED PANEL LIGHTS

Wireman — ALL KINDS OF LED LIGHTS (13397)

Panasonic — ALL KINDS OF LED LIGHTS

AKRA — ALL KINDS OF LED LIGHTS

**பங்குச்சந்தை முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்**

எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 9.30 மணி முதல் 11.30 வரை

**Tilko Jaffna City Hotel** இல்

அனுமதி இலவசம்

உங்களுக்கு பொருத்தமான முதலீட்டு வழிமுறை சம்பந்தமாக அறிந்து கொள்ள எங்களுடன் இணையுங்கள்

முன்பதிவுகளுக்கு :- 777 105 205 / 021 222 1455

(C-5188)

CSE கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)

(வசாவிளான் மத்திய கல்லூரி மாணவன் 2018 உயர்தரம்)



தாயின் மடியில் 18.05.1999

ஆண்டவன் மடியில் 11.11.2020

தம்பி கபிலன் பால்மணம் மாற முன் கொடிய ஆண்டவன்
பாதியில் பறித்தானே தம்பியை இழந்ததால் எங்கள் வீடு பாலை
வனம் ஆனதே தம்பி கபிலன் சிவனாய் கோயிலில் வீற்றிருக்கிறாய்
உன்னை அழைத்து வர எண்ணுகிறோம் அது கனவாகவே
இருக்கின்றதே நிஜமாக வந்து விடு கபிலன் உன் வருகைக்காக
ஏங்கி தவிக்கின்றோம்

இருள் சூழ்ந்த அப்பாவின் வாழ்வில்
ஒளி வீசுமோ இருள் கொண்ட மேகங்கள்
கலைந்து ஓடுமோ அப்பாவின் வாழ்வில்
[illegible]

(13409)

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.